**நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டம் - 2019**

---

நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (உலக வங்கி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 சனவரி 30 ஆம் திகதிய பீ 4910 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை முற்பணத்தின் II ஆம் உறுப்புரையின் 2.05(சீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் முற்பண உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நிதி மற்றும் ஊடக அமைச்சின் கீழும் தற்போதைய நிதி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய திட்டமிடல் திணைக்களம் செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் சுகாதார அமைச்சு, அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சும் அமுலாக்கல் முகவராக உள்ளன. நிதியளிப்பு முகவரகத்தினால் வழங்கும் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளிற்காக உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 4.00 மில்லியனிற்கு சமமான ரூபா 609.55 மில்லியனானதுடன் மொத்தத் தொகையும் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 சனவரி 30 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2020 சனவரி 20 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் செலவினக் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| ------- | -------------------- | --------------- | -------------- | ------------------ | --------------------- |
| (அ) | நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆம் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இல.05 | மீளாய்வாண்டின் போது மீளாய்வாண்டின் போதான செயற்திட்டக் கொடுக்கல் வாங்கல்கள் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கட்டுப்பாடுகள் முறையாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 134 (3) மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆம் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இல.05 இன் அறிவுறுத்தல்களின் படி, 2019 ஆம் ஆண்டின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்மின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின் (பீபீஎப்) வளர்ச்சி மற்றும் தொடர்புபட்ட பிரச்சனைகள் கலந்துரையாடப்பட்டன. | உள்ளகக் கணக்காய் வுப் பிரிவினால் செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல் கள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்பட முடியாது போகும். | நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின் (பீபீஎப்) ஏனை செயற்திட்டங்களைப் போலானது அல்ல. தயாரிப்பு நிலையில் உலக வங்கி நிதியீட்டல் செயற்திட்டங்களின் ஒருங்கிணைப்பு பங்கைச் செயற்படுத்துகின்றது. ஆகவே, செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்கள் நடாத்துவது அவசியமற்றதாகும். எவ்வாறெனினும், நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின கீழ் செயற்திட்டங்களை அமுலாக்கும் ஏனைய வரிசை அமைச்சுக்கள் (பீபீஎப்) கிரமமான அடிப்படையில் செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டங்களை நடாத்தியிருந்தன. ஒருங்கிணைப்பு பங்காளியாக, நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி தேவைப்படும் வேளைகளில் கூட்டங்களை நடாத்தி அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் முன்னேற்றம் குறித்து கலந்தாலோசிக்கப்படும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| செயற்திட்டக் கூறுகள் | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) பொதுத் துறை செயற்திறனை வலுப்படுத்தும் திட்டம்<br>(ஆ) அணை பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடல் திட்டம்<br>(இ) மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்<br>(ஈ) இலங்கை சுகாதார முறைமை உறுதிப்படுத்தல் செயற்திட்டம்<br>(உ) உள்ளூர் விருத்தி உதவி செயற்திட்டம்<br>(ஊ) காலநிலை திறன் நீர்ப்பாசன விவசாய மேம்பாட்டு செயற்திட்டம்<br>(எ) அரசாங்க மற்றும் தனியார் கூட்டு நிறுவக மற்றும் சட்டக் கட்டமைப்பு | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் கிடைக்கப்பெற்ற தகவலின் படி, செயற்திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது பிரேரிக்கப்பட்ட 09 செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்கான நிதி உதவியை வழங்குவதாகும். 09 செயற்திட்டங்களில் 03 செயற்திட்ட நடவடிக்கைகள் கடந்த ஆண்டின் போது அமுலாக்கப்பட்டிருந்ததுடன் ஒருங்கிணைந்த நீர் நிலை மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போதே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.<br><br>தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கங்களின் படி, நான்கு எதிர்பார்க்கப்பட்ட நன்கொடையாளர் நிதியளிப்பு செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டு விரிவான வடிவமைப்புகளைத் தயாரித்துள்ளதாகவும் 03 செயற்திட்ட உடன்படிக்கைகள் மீளாய்வாண்டின் போது உலக வங்கியுடன் | செயற்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் எய்தப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்தின் 2017 – 2019 ஆம் ஆண்டின் போது ஒன்பது செயற்திட்டங்களே அமுலாக்கப்படுவதற்கு இனங்காணப்பட்ட போதிலும், இவை ஒரு வருடம் கடந்து 2018 ஆம் ஆண்டின் போதேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 07 செயற்திட்டங்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டு விபரமான வடிவமைப்பு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினம், நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின் நிதி சில செயற்திட்டங்களிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், தேசிய கொள்கைகள் திணைக்களம் மற்றும் ஏனைய உரிய அரச முகவரகங்கள் அவர்களது தொழிநுட்ப அறிவை செயற்திட்டங்களின் தயாரிப்பிற்காக வழங்கியிருந்தன. மேலும், அரசாங்கத்தின் முன்னுரிமைப்படுத்தல் மாற்றங்கள் காரணமாக சில செயற்திட்டங்கள் அமுலாக்கப்படவில்லை. ஆகவே அரசாங்கத்தின் தேவைப்பாடு மற்றும் முன்னுரிமைப்படுத்தலைக் கருத்திற்கொண்டு உலக வங்கியால் நிதியிடப்பட உள்ள செயற்திட்டக் குழாயில் இருந்து இச் செயற்திட்டப் பட்டியல் மாற்றத்திற்கு உட்படலாம் | செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்டக் குறிக்கோள்களை எய்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கைச்சாத்திடப்பட்டிருந்தன. ஏனை 02 செயற்திட்டங்களின் தயார் நடவடிக்கைகள் பிற்போடப்பட்டிருந்தன. | | என்பது குறிப்பிடத்தக்கது. | |

### 3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ------ | ------------------------------- | ----------- | ----------- | ----------------- |
| (i) | ஆமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்கின் படி, யூஎஸ் டொலர் 4 மில்லியனிற்குச் சமனான ரூபா 609.55 மில்லியன் தொகையே மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், குறித்த இலக்கில் யூஎஸ் டொலர் 0.37 மில்லியனிற்குச் சமனான ரூபா 64.07 மில்லியன் தொகை அல்லது 9.25 சதவீதம் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எய்தப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கம் ரூபா 11.51 மில்லியன் தொகையை செலவிடப்படாத மீதிக்கான உறுதிப்பாட்டுக் கட்டணமாகச் செலுத்த வேண்டி நேரிட்டது. | உறுதிப்பாட்டுக் கட்டணங்கள் 2019 ஆம் ஆண்டின் போது ஏற்கப்பட்டிருக்கவில்லை. | முறையான நிதித் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். |
| (ii) | மொத்த ஒதுக்கீட்டுத் தொகையான ரூபா 325 மில்லியன் தொகையில் செயற்திட்டம் 12 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 39 மில்லியன் தொகையை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. | கடன் தொகை ஒதுக்கீடுகளின் குறைபயன்பாடு | ஒதுக்கீடுகளின் குறைபயன்பாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறாகும்.<br><br>(அ) பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 4/2019 மற்றும் 5/2019 இன் படி, கட்டாய சேமிப்புகளுக்கான ஒதுக்கீடாக ரூபா 84 மில்லியன் (மொத்த மூலதன ஏற்பாட்டின் 25%) மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் படி, செயற்திட்டத்தின் தேறிய ஏற்பாடு ரூபா 325 மில்லியன் தொகையிலிருந்து ரூபா 241 மில்லியன் தொகையாகக் குறைவடைந்திருந்தது.<br><br>(ஆ) திட்டமிடப்பட்ட காலப் பகுதிக்கு முன்னர் மூன்று செயற்திட்டங்களுக்காக கடன் உடன்படிக்கை | நிதியை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு முறையான வழிமுறையை நிறுவ வேண்டும். |

செயற்படுத்தப்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவினம் மீளாய்வாண்டின் போது நேர்ந்திருக்கவில்லை.

(இ) குறித்த அரசாங்க உத்தியோ கத்தர்களால் பெரும்பாலான தயாரிப்பு நடவடிக்கைகள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. ஆகையால் கடன் நிதி எதிர்பார்க்கப்பட்டவகையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க முன்னுரிமைப்படுத்தல் காரணமாக சில செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட வகையில் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சில செயற்திட்டங்கள் வரையறுக்கப்பட்ட நிதி காரணமாக முடிவுறுத்தப்பட்டிருந்தன.